**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

### ஆழத்து முத்துக்கள் 10

# நாட்டுக்கூத்து கலாநிதி பூந்தான் யோசேப்பு

நம்முன்னோர்களின் பாரம்பரிய கலைச்செல்வங்களில் முக்கியமான நாட்டுக்கூத்துக்கலையை ஏறக்குறைய எழுபது ஆண்டுகளுக்கு முன்னதாக, யாழ்ப்பாணப்பிரதேசத்திலிருந்து மன்னார், திரிகோணமலை போன்ற மாவட்டங்களுக்கு எடுத்துச்சென்று, அங்குள்ள கிராமங்களில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து மேடையேற்றி வெற்றிகண்டவர் அண்ணாவியார் பூந்தான் யோசேப்பு அவர்கள்.

இளமைக்காலத்தில் "சஞ்சுவாம்" என்ற நாடகத்தில் ஏரோதுமன்னனாக நடித்து, தனது நடிப்பினாலும், கணீர்க்குரலினாலும் தனது முதல் மேடையேற்றத்தின்போதே ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்றவர். இந்த நாடகம் முடிந்தபின்னர் ஒரு புலவர் மேடையேறி, மலர்மாலை சூட்டி, "பூந்தாரன் யோசெப்பு வாழ்க" என்று உரக்கச் சொன்னாராம். பூந்தாரன் என்றால் பூமாலை அணிந்த மன்னன் என்று பொருள்படும். இதுவே காலகதியில் "பூந்தான்" என்று சிதைந்தது என்பார்கள்.

இவர், யாழ் நவரச நாட்டுக்கூத்து கலாமன்றக் கலைஞர்களுடன் இணைந்து பல கூத்துக்களை வழங்கினார். யாழ் கஸ்தூரியார் வீதி மூலையில் இவருக்கு தொழில் செய்வதற்கு ஒரு நகைக்கடை இருந்தது. இவரது கவனம் முழுக்க கூத்தில் இருந்ததால் தொழில் நிலையம் தூங்கி வழிந்தது. ஆஜானுபாகுவான தோற்றம், தேசிய உடை, எடுத்த எடுப்பில் நாடகக்காரன் என்று யாரும் சொல்லுவார்கள்.

இவரது பேச்சு, மூச்சு எல்லாம் கூத்துதான். கிறிஸ்தவக் கூத்துகள் மூலம் தான் சார்ந்த சமயத்திற்குத் தொண்டாற்றியவர். "சங்கிலியன்", "மனம்போல மாங்கல்யம்", "கருங்குயில் குன்றத்துகொலை." "மரியதாசன்", "தேவசகாயம்பிள்ளை", "எஸ்தாக்கியார்", "சஞ்சுவான் கூத்து", "விஜயமனோகரன்" ஆகியவை இவரது கூத்துக்களில் சில.

இவரது "சங்கிலியன்" நாட்டுக்கூத்தையும், வேறுபல நாட்டுக்கூத்துக்களையும் அக்காலத்தில் இலங்கை வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பியிருக்கிறார்கள். இலங்கை வானொலி தனது பவளவிழாவிற்கென வெளியிட்ட இறுவட்டுக்களில் இவரது "சங்கிலியன்" நாடகமும் இடம்பெற்றது.

1942ம் ஆண்டளவில், யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலை ஆதாரமாகக்கொண்டு,



மாதகல் மதுரகவிப்புலவர் சூசைப்பிள்ளை என்பவரைக்கொண்டு பூந்தான் யோசேப்பு "சங்கிலியன் கதையை" நாட்டுக் கூத்தாகப் பாடுவித்து, அதில் தானே பின்சங்கிலி மன்னனாக நடித்து மேடையேற்றினார்.

கர்நாடகசங்கீதத்தை முறையாக பயிலவேண்டுமென்ற ஆவலினால், அளவெட்டி கர்நாடக இசைவித்வான் முத்துக்குமாரசாமி என்பவரிடம் வாய்ப்பாட்டும், ஆர்மோனியமும் பயின்ற பூந்தான் யோசேப்பு அவர்கள், இத் திறமையினால் நாட்டுக்கூத்துக்களை மேலும் மெருகுபடுத்தி மேடையேற்றினார்.

நடிகனாக புகழ்பெற்று விளங்கிய பூந்தான் யோசேப்பு அவர்கள் தென்னிந்தியா சென்று சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற ஆசையில், தனது கலையுலக நண்பர்களான இணுவில் வேல்நாயர், பபூன் செல்லையா என்பவர்களுடன் இந்தியாவுக்கு சென்றது ஒரு சுவையான கதை.

எம்.கே. தியாகராஜபாகவதர் நடிப்பதாக இருந்த "துரோபதை வஸ்திராபரணம்" என்ற திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்பு இவர்கள் மூவருக்கும் கிடைத்தது. ஆனால் இறுதியில் அத்திரைப்படம் தயாரிப்பு நிறுத்தப்பட்டுவிட, மூவரும் கைப்பணத்தையும் இழந்து நாடு திரும்பினார்களாம்.

நாடுதிரும்பியபின் முழு உற்சாகத்துடன் நாட்டுக்கூத்துக்கலையில் ஈடுபட்டு, சுமார் அறுபது ஆண்டுக்காலம் கூத்துக்கலையை தொடர்ந்து வளர்த்தவர். முற்குறித்தவைகளைத்தவிர, தென்னிந்திய எழுத்தாளர் பி.எஸ்.ராமையா எழுதிய "தேரோட்டி மகன்" நாடகத்தில் துரியோதனனாகவும், புலவர் தட்சணாமூர்த்தியின் "இராவணேஸ்வரன்" நாடகத்தில் இராவணனாகவும் நடித்திருக்கிறார். இந்த நாடக மேடையேற்றத்தின்போது தான், இவருக்கு "நாட்டுக்கூத்துக் கலாநிதி" என்ற பட்டம் வழங்கப்பெற்றது.

கொச்சகம், கலிப்பா, ஆசிரியம், விருத்தம், கலி, இன்னிசை, சந்தவிருத்தம், தாழிசை, அகவல், உலா போன்ற பாவினங்கள் நாட்டுக்கூத்துகளில் அழகையும், வனப்பையும், இனிமையையும் தருவன. மேற்குறிப்பிட்ட சந்தவகைகள் அத்தனையிலும் வல்லவர் பூந்தான் யோசேப்பு அவர்கள்.

ஒருமுறை "ஊரணி" கிராமத்தில் பாசையூர் வளர்பிறை நாடகமன்றத்தினரின் "கண்டியரசன்" நாடகமும், நடிகமணி வி.வி.வைரமுத்துவின் "மயானகாண்டமும்" பூந்தான் யோசேப்புவின் "சங்கிலியன்" நாட்டுக்சுத்தும் ஓரேமேடையில் நிகழ்த்தப்பட்டன. மூன்று அற்புதமான படைப்புக்கள். சிறந்த கலைஞர்கள். ஜன வெள்ளம் திரண்டிருந்ததாம்.

முதல் இரண்டுநாடகங்களும் மேடையேறிய பின் "சங்கிலியன்" மேடையேறியபொழுது, உடல்நலமற்று நடிக்கமுடியாதநிலையிலும், கலைஞனுக்கேயுரித்தான உற்சாகத்துடன் யோசேப்பு அவர்கள் மன்னனாக நடித்ததைப் பார்த்து மகிழ்ந்த, நடிகமணி வைரமுத்து, தான் அவர்களுக்கு ஒருமணித்தியாலமாவது ஆர்மோனியம் வாசிக்கவேண்டும் என்று விரும்பி வாசித்து, நாடகமுடிவில் பூந்தான் யோசேப்புவை ஆரத்தழுவிப் பாராட்டினாராம். அந்தச்சிறந்த கலைஞனின் செயலினால் பூந்தான் ஸ்தம்பித்துப்போய் நின்றிருக்கிறார்.

இவரோடு இவரது கூத்துக்களில் பங்குபற்றிய பலரில் பேக்மன் ஜெயராஜா, ஊர்காவற்றுறை வைத்தியாம்பிள்ளை சின்னம்மான், பாசையூர் குணசிங்கம், அருளானந்தம் ஜேசுதாசன், சவரிமுத்து ஏபிரகாம், கே.ஏ.செல்லத்துரை, பிரான்சிஸ் ஜெனம், எஸ்.என்.சி. நாதன், ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

"தன் நடிப்பால், பாட்டுத்திறத்தால், தாழ்ந்து நடக்கும் தன்மையால், தண்மையான பண்பினால் அரசுசெய்த தங்கத்தமிழன்" என்று நாடகக்கலாநிதியைப்பற்றிக்கூறி, மறைந்த எழுத்தாளர் அகஸ்தியர் "பூந்தான் யோசேப்பு – கலையுலக வாழ்ககை வரலாறு" என்ற தனது நூலை நிறைவு செய்கிறார்.

நீண்டகாலமாக நாட்டுக்கூத்தை தன்மூச்சாகக் கொண்டு வாழ்ந்து மறைந்த இந்தக் கலைஞனை நினைவில் பதித்துக்கொள்வோம்.



sanmuganathan@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

www.thaiveedu.com